# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

### அ.சா.19 (LW 30 )

| **பெயர்** | சண்முகலெட்சமி | **தொழில்** | |
|---|---|---|---|
| **கணவர் பெயர்** | பரமசாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **13.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது தென்காசி மாவட்டம் சிவகிரி காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.03.2021ஆம் தேதி அம்மையநாயக்கனுர் காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது நிலக்கோட்டை காவல் நிலைய பொறுப்பு ஆய்வாளராக இருந்த போது நிலக்கோட்டை காவல் நிலைய சிறப்பு உதவி காவல் ஆய்வாளர் திரு.ரவி அவர்கள் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையின் படி நிலை குற்ற எண் 99/2021 பிரிவு 174 CRPC இன் படி வழக்கு விசாரணை மேற்கொண்டு வாதி கக்கணன் மகன் மொக்கை ராஜ் என்பவர் கொடுத்த புகாரின் பெயரில் வழக்கு விசாரணை செய்து தனது மகன் சென்றாயன் என்பவர் மூக்கில் இரத்தக்காயங்களுடன் இறந்து கிடப்பதாக கூறி புகாரின் அடிப்படையில் சம்பவம் இடம் சென்று பிரேதத்தை கைப்பற்றி, சம்ப இட சாட்சிகளான கைலங்கிரி வாசகம் மற்றும் வேலு ஆகியோர் முன்னிலையயில் வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வை மகஜர் அ.சா.ஆ.2ஆக ஏற்கெனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் தயார் செய்த வரைபடம் அ.சா.ஆ.12ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. பிரேத பரிசோதனை அறிக்கை வேண்டி நிலக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனை செய்ய வேண்டி அறிக்கை அனுப்பினேன். மற்றொரு அறிக்கையினை நிலக்கோட்டை இரண்டாம் நிலை நடுவர் நிலக்கோட்டை அவர்களுக்கு அனுப்பியும் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.15 மணிக்கு பிரேத பரிசோதனைக்காக வேண்டுகொள் கடிதம் அனுப்பியும், பின்னர் முதல் நிலை காவலர் 2055 திரு. அய்யாச்சாமி அவர்கள் மூலமாக நிலக்கோட்டை அரசு மருத்துவமனை பிரேத அறைக்கு அனுப்பினேன். பின்னர் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து அறிக்கை தயார் செய்தேன்

அதில் பஞ்சாயத்தார் சாட்சிகளான கார்மேகம், பாக்கியநாதன், பன்னீர் செல்வம், தங்கமுத்து, வெள்ளைதனத்தன் ஆகியோர்களின் கையொப்பம் வாங்கினேன். நான் தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.13**ஆக தற்போது குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் நிலக்கோட்டை அரசு மருத்துவமனை பிரேத பரிசோதனை முடித்து அன்றைய தினமே உடற்கூராய்வு வேண்டி மதுரை தடைய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்து. பின்னர் எனது தொலைபேசிக்கு வாட்சப் மூலமாக வந்த புகைபடங்களை பார்வையிட்டு பிரிண்ட் எடுத்து வழக்கு கோப்புடன் வைத்தேன். பின்னர் எனது விசாரணை முடித்து மேல் விசாரணைக்காக நிலக்கோட்டை காவல் ஆய்வாளர்க்கு வழக்கு கோப்பு ஆவணங்களை ஒப்படைத்தேன்.

**<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சம்பவ இடம் சென்ற போது சுமார் காலை 7.15 மணி இருக்கும். அதற்கு முன்பு நான் செல்லவில்லை. நான் அங்கு உள்ளவர்களிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கினேன். சம்பவ நடந்த வீட்டின் கீழ் தளத்திலும் மேல் மாடியிலும் சோதனையிட்டு ஆதாரங்கள் உள்ளனவா என்று சோதனையிட்டேன். அப்போது நான் எந்த பொருட்களும் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். நான் சோதனை செய்த சமயம் VAO வும் உடன் இருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டபடும் **அ.சா.ஆ.12**(வரைபடம்) தேதி இல்லை என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கும் இறந்தவர் வீட்டிற்கும் சுமார் 3 முதல் 4 கி.மீ என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை செய்வதற்கு முன்பாக சம்பவ இடத்தில் பிரேத விசாரணை செய்தேனா என்றால் செய்யவில்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் , சொன்ன இடத்தில் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரிக்கப்படவில்லை, வாக்குமூலங்கள் மாதிரி வரைபடங்கள் , பார்வை மகஜர் ஆகியவை வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தவை என்றால் சரியல்ல. பிரேத விசாரணை எதுவும் செய்யவில்லை. பிரேத அறிக்கை பின்னிட்டு காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தவை என்றால் சரியல்ல. வாட்சப் மூலமாக கிடைத்த போட்டோவை எந்த கடையில் பிரிண்ட செய்தேன் என்று ஞாபகம் இல்லை. நான் சொல்வது போல் வாட்சப் மூலமாக யாரும் புகைப்படம் அனுப்பவும் இல்லை, பிரிண்ட் எடுக்கவும் இல்லை மேற்படி சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக சித்தரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

**<u>2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.</u>**

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this

contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN
Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.14 09:22:10 +0530

Additional District Judge,

Dindigul.